பற்றி ஆகாயத்தில் சுழற்றி எறியவே அவ்வுடல் அழுதா நதிக் கரையில் விழுந்தது. அவளை வதைத்தார் ஐயப்பன். மகிஷியின் உடலில் இருந்து பேரொளி தோன்றி அது பெண்ணானது. ஐயப்பன் அவளை ஆசீர் வதித்தார். அவள் தன்னை மனைவியாக ஏற்க வேண்டினாள். மறுத்துவிட்ட ஐயன் தமது கோயிலின் வலப்புறம் ''மஞ்சள் மாதா'' எனும் பெயரில் வீற்றிருக்க அருள் புரிந்தார்.

## மஞ்சள் மாதா

சாப விமோசனம் பெற்ற மகிஷியின் மீது கருணை கொண்டு ஸ்ரீ ஐயப்பன் இப்பெயர் தந்தார். மணம் செய்யுமாறு வேண்டிய மஞ்சள் மாதாவிடம் இப்பிறப்பில் பிரமச்சரியப் பிறப்பினை உணர்த்த வந்ததை எடுத்துரைத்தார். கல்லிடுங்குன்றில் கல் விழாதிருந்தால், சரங்குத்தி ஆலில் சரங்குத்தப்படாதிருந்தால் மணம் நிகழும் என்றார். மகர விளக்கன்று இரவில் இது தொடர்பான விழா இன்றும் நிகழ்கிறது.

## மடக்கு யாத்திரை

சபரிமலை யாத்திரை நிறைவு பெற்ற பின் ஐயப்பன்மார்கள் வீடு திரும்புவர். நள்ளிரவுக்குப்பின்னும் மறுநாளும் திரும்பும் யாத்திரை நிகழும். பள்ளிக் கட்டுகளை சுருக்கிக் கட்டி, வடக்குப் படி வழி ஏறி, வலம் வந்து, சுவாமியின் நடை முன்பு சரணம் கூறித் தொழுது, தேங்காய் உடைத்து, பின்புறம் காட்டாமல் படி யிறங்குவர். பதினெட்டாம்படி முன்பு நின்று ''எல்லா வருஷங் களிலும் வந்து தரிசனம் பெற அருள் புரியுமாறு'' பிரார்த்தனை செய்வர். பின்பு மடக்கு யாத்திரையை மேற்கொள்வர்.

நிலக்கல், தலைப்பாறைக் கோட்டை வழிவரும் தெற்கு வழியைத்தான் பயன்படுத்த வேண்டும் என்பது பழைய ஆசாரம். இது சிரமம் நிறைந்தது. தற்போது சாலக்கயம் பாதையே பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. எரிமேலி, வண்டிப் பெரியாறு வழிகளும் முன்பு மேற்கொள்ளப்பட்டன. எவ்வழி வருவதாயினும், எங்கும் தங்காது நாடு வந்தடைதல் மரபு. வீடு சென்று, கட்டினை இறக்கி வைத்து கட்டின் மேல் மாலையை கழற்றி வைத்து விரதத்தைப் பூர்த்தி செய்வர். தைமாதம் ஏழாம் நாள் வரை விரதம் காத்து அதன்பின் மாலை கழற்றுவோரும் உண்டு.

## மண்டல பூஜை

மண்டல காலத்தின் 41-ஆம் நாள் கொண்டாடப்படுவது. மாலை பூஜை உண்டு; எனினும் உச்சி கால பூஜையே மண்டல பூஜை.

## மணிகண்டன்

பந்தள அரசர் வேட்டையாட வந்த கானகத்தில், பம்பை நதிக்கரையில் கிடைத்த குழந்தையை எடுத்து வளர்த்தார். அவதரிக்கும் போது சிவபிரான் ஐயப்பன் கழுத்தில் மணிமாலை அணிவித்தார்; நதிக் கரையில் குழந்தை அழும் ஒலி கேட்டு வந்த மன்னனிடம், திருமால் கிழவேதியர் வடிவில் வந்து, கழுத்தில் மணியுடன் திகழும் பாலகனை மணிகண்டன் எனப் பெயரிட்டு வளர்க்கப் பணித்தார்.

## மரக்கூட்டம்

நீலிமலையிலிருந்து அப்பச்சி மேடு; அங்கிருந்து சபரி பீடம்; பின்பு மரக் கூட்டம். கானக வனப்பு கண்ணைக் கவரும். இங்குதான் நீலிமலை ஆரம்பத்திலிருந்து பிரியும் சுப்ரமண்யம் பாதை இணைகிறது. இங்கு யானை வரத்து மிகுதி.



மாளிகைப்புறம்

## மலைநடை பகவதி

மாளிகைப்புறத்தின் வடக்கில் அமைந்தது மலைநடை பகவதி பிரதிஷ்டை. இங்கு வரும் பக்தர்கள் காணிக்கை இட்டு விளக்கேற்றி, வெடி வழிபாடு செய்வர்.

## மாளிகைப்புறம்

சந்நிதானத்தின் வடபுறம் சுமார் நூறடி தூரத்தில் உள்ளது மாளிகைப்புறம். மஞ்சள் மாதாவின் சந்நிதி இது. தேங்காய் உருட்டுவது, வெற்றிலை, மஞ்சள் பொடி, பட்டு, குங்குமம் என்பவற்றைக் காணிக்கை தருவது, வெடி வழிபாடு செய்வது என்பன வழிபாடுகள். மஞ்சள் பிரசாதம் உட்கொள்வர்; பொட்டாக இட்டுக் கொள்வர். இங்கு உடல் நலமும், நாநலமும் பெறலாம்.

## முக்குழிப் பள்ளத்தாக்கு

இஞ்சிப்பாறையை அடுத்து வருவது. அழுதா இறக்கம், அரியக் கட்டி வழியாகவும் வந்து முக்குழியை அடையலாம். இங்கும் இளைப்பாறலாம். இதன்பின் சுமார் 10 கி.மீ. தூரம் இடையே ஊர்கள் ஏதுமில்லாத காட்டு வழி நீள்கிறது.

## மூன்று பாதைகள்

சபரிமலை ஐயப்பன் கோவிலை அடைவதற்குப் பல்வேறு வழிப்பாதைகள் இருப்பினும் அதில் மூன்று பாதைகள் மிக முக்கியமானவை. 1. எருமேலிப்பாதை 2. சாலக்கயம் பாதை 3. வண்டிப் பெரியாற்றுப் பாதை.

**எருமேலிப் பாதை:** மிகவும் முக்கியமானது; பிரசித்தி பெற்றது. கல்லும் முள்ளும் மிதித்து, காடும் மேடும் கடந்து செல்லும் 40 மைல் தூர நெடிய நடைப் பயணப் பாதை. கன்னி ஐயப்பன்மார் கட்டாயமாகச் செல்ல வேண்டிய பாதை இது எனக் கூறப்படுகிறது. ஐயப்பன் சஞ்சரித்த ஏழு கோட்டைகளையும் இவ்வழிச் சென்றால் மட்டுமே தரிசிக்க இயலும். பேட்டை துள்ளல், வாவர் பள்ளி தரிசனம், சரங்குத்தி எடுத்தல் போன்றவை இவ்வழியில் மிக முக்கியமான சடங்குகள். இங்கிருந்து பெருந்தோடு, அழுதை நதி, வாழைத் தோட்டம், கல்லிடுங்குன்றம், கரிமலை ஏற்ற இறக்கம் கடந்து பம்பை நதிக் கரை அடையலாம்.

**சாலக்கயம் பாதை:** சுருக்கு வழி. கோட்டயத்தில் இருந்து இப்பாதையை அடைதல் எளிதானது. இங்கிருந்து சுமார் 10 மைல் தூரத்தில் ஐயனின் சன்னிதானம் உள்ளது.

**வண்டிப் பெரியாறு பாதை:** தேனி, கம்பம் வழியாக மிகச்

தேவாதி தேவனே... சரணம் ஐயப்பா ❁ தேவேந்திர பூஜிதனே... சரணம் ஐயப்பா